# மே 6 - புனித தோமினிக் சாவியோ

இவளுடைய தாயும் தந்தையும் இவருக்கு, இல்லத்தில் சிறந்த கல்விப்பயிற்சி அளித்து உத்தம கிறிஸ்தவ வாழ்வு நடத்த இவருக்கு வழிகாட்டினார்கள். பங்குத் தந்தை கடவுள் மீது பக்தியையும், தேவதாயின் மீது அன்பையும் இவரது உள்ளத்தில் ஊன்றினார். தோமினிக் ஒவ்வொரு நாளும் அதிகாலையில் ஐந்து மணிக்கு கோவிலுக்குப் போய் திருப்பலிக்கு உதவி செய்வார். பின்னர் கோவிலில் இருந்து பக்தி முயற்சிகளை அனுசரிப்பார். மழையானாலும், வெயிலானாலும், பனிக்கட்டி உறைந்திருந்தாலும் பயங்கர கோடை காலமாக இருந்தாலும் சிறுவனை எப்பொழுதும் குறிப்பிட்ட நேரங்களில் கோவிலில் காணலாம். கடவுளுக்கு சேவை செய்வது நமக்கு மகிழ்ச்சியை தருகிறது. கடவுளை மக்கள் நேசிக்கச் செய்வது வல்லமையுள்ள அப்போஸ்தல வேலையாகும். இவ்வுண்மைகளை நம் புனிதர் புனித ஜாண் போஸ்கோவிடமிருந்து கற்றுக்கொண்டார். “தோமினிக் போன்ற சிறுவன் தான் ஞானஸ்தானத்தில் பெற்றுக் கொண்ட தூய்மையை சாகும்வரை காப்பாற்ற வீரத்துடன் போர் புரிவானானால் அவன் உண்மையாகவே புனிதன்” என்று இவரைப் பற்றி புனித பத்தாம் பத்திநாத பாப்பு கூறினார். “இவர் உத்தம கிறிஸ்தவ வாழ்வு நடத்தி தூய்மை, பக்தி, ஆர்வம் என்னும் மூன்று ஊற்றுகளிலிருந்து பலம் பெற்றார்” என்று 11-ஆம் பத்திநாதர் பாப்பு கூறினார்.




சிந்தனை:

ஆண்டவரே, நான் உம்மை மனம் நோகச் செய்யும் ஆபத்தில் இருப்பதை எப்போதாவது நீர் காண்பீரானால் உடனே என்னை உம்மிடம் எடுத்துக் கொள்ளும். பாவத்தை விட சாவையே விரும்புகிறேன். (புனித தோமினிக் சாவியோ)

செபம்:

ஆண்டவரே, பாவத்தை விட சாவையே நாங்கள் விரும்பும் வரம் தாரும்.